# தேசிய பொருளாதாரத்திற்கு புத்தாக்குனர்களின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளும் போது குறித்த அரச நிறுவனங்களின் பங்களிப்பு



அறிக்கையின் இலக்கம் : பீஈஎஸ்/பீஈ/ஜஎன்வீ/2014/04

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**செயலாற்றல் மற்றும் சுற்றாடல் கணக்காய்வுப் பரிவு**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | 1 |
| 2. | பின்புலம் | |
| 2.1 | அறிமுகம் | 3 |
| 2.2 | கணக்காய்விற்கான அதிகாரம் | 4 |
| 2.3 | கணக்காற்விற்கான தொடர்பு | 4 |
| 2.4 | கணக்காய்வின் நோக்கம் | 5 |
| 2.5 | கணக்காய்வின் விடயப் பரப்பு | 5 |
| 3. | விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், மதிப்பீடு மற்றும் சிபாரிசு | |
| 3.1 | நிறுவனம்சார் செயற்பொறுப்புக்கள் | 6 |
| 3.2 | புத்தாக்குனர்களுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு நிதிஉதவிகள் | 13 |
| 3.3 | புத்தாக்குனர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல் | 21 |
| 3.4 | இலங்கைகளின் இளைஞர்களுக்கிடையே ஆக்கத்திறனை மேம்படுத்துதல் | 27 |
| 3.5 | புத்தாக்கங்களை உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் சந்தைப்படுத்துதல் | 30 |
| 4. | முடிவுகள் | 33 |

## 1. நிறைவேற்றுப் பொழிப்பு

இலங்கையின் அபிவிருத்தி செயற்பாடுகள் பலவற்றை அமுல்படுத்துவதன் மூலம் துரித பொருளாதார அபிவிருத்தியொன்றை அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் போது புத்தாக்கங்கள் தொடர்பாக அதிக கவனம் செலுத்தும் அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் உலக பொருளாதாரத்தில் அதிகாரம் செலுத்தும் பொருளாதார பெறுமதியுடைய புத்தாக்கங்களை உருவாக்குவதன் காரணமாகவேயாகும். இந்த அபிவிருத்தியடைந்த நாடுகளின் மூலம் வடிவமைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள், கமத்தொழில் மற்றும் கைத்தொழில் உபகரணங்கள் போன்ற எமது நாட்டிற்குத் தேவையான உபகரணங்கள், சேதனப் பசளை மற்றும் கிருமி நாசினிகள் போன்ற பொருட்களுக்காக அதிக விலையொன்றைச் செலுத்துவதற்கு எமது நாட்டிற்கு ஏற்பட்டிருந்தது. அவ்வாறே இந்த நாட்டிற்கு கொண்டுவரப்படுகின்ற இந்த உபகரணங்கள், சேதனப் பசளை மற்றும் கிருமிநாசினிகளில் அனேகமானவை எமது நாட்டின் சுற்றாடலுக்கு ஒத்துவராத மற்றும் பாதகமாக இருந்தமைக்கான தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அதனால் இலங்கையிலேயே எமது நாட்டிற்கு சாதகமான இயந்திர உபகரணங்கள், அத்தியவசிய பொருட்களுக்கான புத்தாக்கங்களை ஊக்குவிப்பது தொடர்பில் கவனம் செலுத்துதல் முக்கியமானதாகும்.

இலங்கையில் புத்தாக்குனர்களை ஊக்குவிப்பதற்காக 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்கவிக்கும் அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவும், புத்தாக்கங்களை பாதுகாப்பதற்கு பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பதிவுசெய்தல் மற்றும் நிர்வகித்தலுக்காக 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கையில் தேசிய புலமைச் சொத்து அலுவகம் என்பன உருவாக்கப்பட்டிருந்தன. புத்தாக்குனர்களை வலுப்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களின் உரித்தை பாதுகாப்பதற்காக அந்த நிறுவனங்களின் பங்களிப்பை மதிப்பாய்வு செய்தலே எமது கணக்காய்வின் நோக்கமாகும்.

1979 இன் 53 ஆம் இலக்க புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் மூலம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள நோக்கங்களை பூரணமாக நிறைவேற்றுவதற்கு போதியளவான பதவியணியொன்று இல்லாதிருந்ததுடன் புத்தாக்குனர்களுக்கு நிதிஉதவி வழங்குதல், தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல் மற்றும் சட்ட உதவிகளை வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் போதியளவாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட போட்டிகளில் இதற்காக முன்வருகின்ற போட்டியாளர்களில் அனேகமானோரின் உருவாக்கங்கள் உயர் சந்தையொன்றில் எதிர்பார்க்க முடியாத ஆக்கங்களாக இருந்தமை மற்றும் அவற்றை சந்தைக்கு முன்வைப்பதற்காக தொழில்நுட்ப ரீதியாக அபிவிலுத்தி செய்தல் அத்தியவசியமாக இருந்தமை இதன் போது புடம்போட்டுக் காணப்படுகின்ற அவதானிக்கப்பாகும். பாடசாலை மாணவர்களுக்கிடையே புத்தாக்கங்களை ஊக்குவித்தலின் முக்கியத்துவம் தொடர்பாக ஆணைக்குழு இனங்கண்டிருந்த போதிலும், பாடசாலை புத்தாக்குனர்களின் சமூகமொன்றை

தாபித்தல், சர்வதேச போட்டிகளுக்காக மாணவர்களைப் பங்குபற்றச் செய்தல், பாடசாலை புத்தாக்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களை தொடர்புபடுத்துதல் மற்றும் அவைகளை வணிகமயப்படுத்துதல் போன்ற பணிகளின் செயல்முன்னேற்றம் திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

புத்தாக்கங்களை பாதுகாக்கும் செயற்பாடுகளின் போது வழங்கப்பட்டிருந்த பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக அனுப்புதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை, பேடன்ட் அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பங்களை பரீட்சிப்பதிலுள்ள தாமதம், தரவுகளை கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமைகளுக்குள் உள்ளீர்க்கும் செயற்பாடுகளில் தாமதம் மற்றும் பேடன்ட் அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர்களுக்காக சரியான மதியுரைச் சேவைகள் காணப்படாமை போன்ற விடயங்களினால் இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம் மூலம் புத்தாக்குனர்களுக்காக வழங்கப்படுகின்ற சேவைகள் திருப்திகரமானதாக காணப்படவில்லை. பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகளின் போது உரிய செயற்பாடுகளுக்காக போதியளவான பதவியணியொன்று இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை தேசிய பொருளாதாரத்தில் ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்காக அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பு போதியளவான பிரகாரம் இருக்க வேண்டியமை மற்றும் விசேடமாக பாடசாலைக் கல்வி மூலம் புத்தாக்குனர்களை உருவாக்கும் பின்புலமொன்றை பாடசாலைகளில் ஏற்படுத்துதல் ஆரம்ப தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் புத்தாக்குனர்களை உருவாக்குவதற்குத் தேவையான ஆரம்ப படிமுறைகளை இனங்காணல், அவற்றை அமுல்படுத்துதல் மற்றும் புத்தாக்குனர்களை இனங்காணல் மற்றும் அந்த புத்தாக்கங்களுக்காக ஊக்குவிப்புக்களை மேற்கொள்வதன் மூலம் இந்த ஆக்கங்களை தேசிய பொருளாதாரத்திற்கு ஆக்கபூர்வமாக ஈடுபடுத்துவதற்கு முடியுமாக இருக்கின்றது.

## 2. பின்புலம்

### 2.1 அறிமுகம்

பொருளாதார அபிவிருத்தியொன்றை அடையும் விரைவான பயணத்தின் போது இலங்கையின் புத்தாக்கங்கள் தொடர்பான உருவாக்கங்கள் அதிக எண்ணிக்கையில் தோற்றம்பெற்றிருந்தன. பல்லூடக நிறுவனங்களின் மூலமும் புத்தாக்கங்கள் மற்றும் புத்தாக்குனர்களை அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன், பல்வேறு மட்டங்களில் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை உருவாக்கும் ஆர்வம் அதிகரித்தவண்ணமிருந்தது. அது நாடொன்றின் அபிவிருத்தி செயற்பாடுகளில் நல்ல இலட்சணமாக கண்டறியப்பட்டுள்ளது.

புத்தாக்கங்களில் தொழில்நுட்பத் துறைகளில் குறிப்பாகவுள்ள பிரச்சினைகளை தீர்த்தலுக்கு உதவுவது புத்தாக்குனர்களின் பிரயோகரீதியான இலக்காக அர்த்தம் கொள்ளப்படுகின்றது. புத்தாக்கங்களை பாதுகாப்பதன் கீழ் அதற்காக கிடைக்கின்ற பேடன்ட் அனுமதிப்பத்திரம் மூலம் புத்தாக்குனர்களின் உருவாக்கங்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் புத்தாக்கங்களின் நலன்களைப் பெறும் உரித்தை உறுதிப்படுத்துதல் என்பன வேண்டப்படுகின்றன. பேடன்ட் அனுமதிப்பத்திரம் என்பது புத்தாக்குனருக்கு தமது புத்தாக்கங்களுக்கான தனியுரிமை இருபது வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டு வழங்கப்படும் அரசினால் விநியோகிக்கப்படுகின்ற அனுமதிப்பத்திரமாகும். இலங்கையின் புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களுக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரமொன்றை வெளிநாடுகளிலும் பெற்றுக் கொள்ளும் இயலுமை காணப்படுகின்றது.

ஏதாவது நாடொன்றில் புத்துருவாக்கங்கள் இருந்த போதிலும், அந்த உருவாக்கங்களின் பெறுபேறுகளை எடுக்காதிருப்போமாயின் அது நாட்டிற்கு மிகத் துர்ப்பாக்கியமாகும். புத்தாக்கங்கள் தொடர்பாக தற்போது இவ்வாறான உருவாக்கங்கள் உள்ள சந்தர்ப்பத்தில், அவற்றை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு புத்தாக்கங்களை பங்களிப்புச் செய்வதற்கு முடியுமாக உள்ளது.

புத்தாக்குனர்களின் வடிவமைப்பில் உருவானவைகள் மாத்திரம் அல்லது மதிப்பீட்டிற்கு உட்படுத்தியவைகளை மாத்திரம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு எதிர்பார்க்க முடியாதிருந்ததுடன் அந்த புத்தாக்கங்கள் உரிய பிரகாரம் நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்தல் கட்டாயமானதாகும். இதன் பிரகாரம் புத்தாக்கமொன்று வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் அதற்காக பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளல், புத்தாக்கங்களை மேம்படுத்துதல், தொழில்நுட்பங்களை கையளித்தல், உற்பத்தி மற்றும் விற்பனை போன்ற அனேக படிமுறைகளைப் பின்பற்ற வேண்டியுள்ளது.

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு, இலங்கையர்களின் புத்தாக்கங்களை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பை நோக்கமாகக் கொண்டு 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தினால் நிறுவப்பட்ட நிறுவனமொன்றாகும். ஆரம்பத்தின் போது வணிக அமைச்சின் கீழ் தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு இணையான நிறுவனமொன்றாக செயற்பட்டிருந்தது. தற்போது இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் மூலம் இலங்கை புலமைச் சொத்து முறைமை கட்டுப்படுத்துவதுடன், அதன் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலங்கையின் தேசிய புலமைச் சொத்து அலுவலகம் மூலம் பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கும் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டு புத்தாக்கங்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் போக்கு விருத்தியடைந்து செல்கின்றது.

## 2.2 கணக்காய்விற்கான அதிகாரம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது.

## 2.3 கணக்காய்விற்கான தொடர்பு

இலங்கையில் நகர மற்றும் கஷ்டப் பிரதேசங்களில் உருவாகிய பராயமடையாத மற்றும் வயதுவந்த பிரஜைகளின் ஆக்கமூலங்களை எடுத்துக்காட்டுகின்ற விருப்பத்துடன் தேசிய முக்கியத்துவமுடைய துறைகளில் புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு புத்தாக்குனர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தி புத்தாக்கங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு வணிகமயப்படுத்தி நாட்டிற்கு பயனுள்ள உற்பத்தியைப் பெற்றுக்கொள்ளல், அந்த உற்பத்திக்காக உள்நாட்டு மூலப்பொருட்களை பயன்படுத்துதல், தொழில்வாய்ப்புச் சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் வேலையின்மைக்கு தீர்வொன்றை வழங்குதல் மற்றும் இறுதியாக கைத்தொழிலை அபிவிருத்தி செய்ததன் பின்னர் வரி செலுத்துபவராக நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வது தொடர்பில் ஆர்வத்தை அதிகரித்தல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கும் போது கடந்த காலங்களில் இலங்கையில் உருவான புத்தாக்குனர்களில் அனேகமானோர்களின் ஆக்கங்கள் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடியதாக திருப்திகரமான நிலையில் காணப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அவ்வாறான நிலைமையின் அடிப்படையில் இந்த கணக்காய்வு தொடர்புபடுகின்றது.

## 2.4 கணக்காய்வின் நோக்கம்

புத்தாக்குனர்களை வலுப்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களின் உரித்தைப் பாதுகாத்தல் என்பவற்றுக்காக அரசாங்க நிறுவனங்களின் பங்களிப்பை மதிப்பீடு செய்தல் கணக்காய்வின் நோக்கமாகும்.

## 2.5 கணக்காய்வின் விடயப் பரப்பு

(அ) புத்தாக்குனர்களை இனங்காணுதல், ஊக்குவித்தல் மற்றும் உரிய புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பயனுள்ள புத்தாக்கமாக உருவாக்கல் தொடர்பாக செயற்படுகின்ற அரசாங்க நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்ற கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் வினைத்திறனை பரீட்சித்தல்.

(ஆ) கணக்காய்விற்காக காணப்படுகின்ற காலநேரம் மற்றும் மனித வளங்கள் என்பவற்றின் அளவின் அடிப்படையில் செயலாற்றல் கணக்காய்வின் அளவு தெரிவு நடைமுறைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் எங்களது கணக்காய்வுப் பரிசோதனை, மதிப்பீட்டிற்கு உட்படுத்திய புத்தாக்குனர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்தது.

## 3. விரிவான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், மதிப்பீடு மற்றும் பரிந்துரை

### 3.1 நிறுவனம் சார் பணிப் பொறுப்புக்கள்

இலங்கையில் உருவாகின்ற புத்தாக்கங்களை மதிப்பிடுதல் மற்றும் புத்தாக்கங்களை உருவாக்குவதற்குத் தேவையான பொருத்தமான சூழலை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை அடைந்துகொள்ளக்கூடிய நலன்கள் முக்கியமானதாகும். எந்தவொரு நாடும் தனது நிலையான இருப்பு மற்றும் அபிவிருத்தியை சுய நிர்மாணங்களின் ஊடாக ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்ததுடன் புத்தாக்கங்களை உருவாக்குவதற்கும், அவற்றை ஊக்குவிப்பதற்கும் பொருத்தமான சூழலொன்றை ஏற்படுத்தும் போது அதற்காக பங்களிப்புச் செய்யக்கூடிய நிறுவனம் சார் பணிப்பொறுப்புக்கள் மிகவும் முக்கியமானதாகும்.

#### 3.1.1 இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு இலங்கையர்களின் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும் நோக்கில் 1979 இன் 53 ஆம் இலக்க புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட கூட்டுத்தாபனமொன்றாக இருந்ததுடன் புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் நோக்கில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013-2015 ஆம் ஆண்டுகளின் கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டு விளக்கமளிக்கும் மாநாடுகளின் எண்ணிக்கை முறையே 10 மற்றும் 15 ஆக இருந்ததுடன் உள்ளபடியான நடாத்தப்பட்ட மாநாடுகளின் எண்ணிக்கை முறையே 4 மற்றும் 5 ஆகும். உள்ளபடியான நிலைமையை இலக்குடன் ஒப்பீடு செய்யும் போது உரிய இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 11(1)(ஓ) உப பிரிவின் பிரகாரம் ஆராய்ச்சி மற்றும் பொது விஞ்ஞானம் தொடர்பான தகவல்களை பிரசுரித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆணைக்குழுவின் நோக்கமாகும். ஆணைக்குழுவின் 2012,2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அவ்வாறான பணிகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரச் சட்டத்தின் 11(1)(ஒ) உப பிரிவின் பிரகாரம் புத்தாக்குனர்களுக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்காக மாதாந்தக் கூட்டம் தொடர்ந்தும் நடாத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான கூட்டம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை ஆணைக்குழுவின் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டது.

**மதிப்பீடு**

புத்தாக்குனர்களை ஊக்கவிக்கும் பணியை இலக்கிடப்பட்ட நிலைக்கு அடைந்து கொள்ள முடியாமையினால் புத்தாக்குனர்களுக்காக நிறைவேற்ற வேண்டிய நிகழ்ச்சித்திட்டங்கள் வெற்றியளிக்காமை.

**பரிந்துரை**

i. புத்தாக்குனர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக போதியளவான நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்.

ii. ஆணைக்குழுவின் இணைய தளம், இலத்திரனியல் மற்றும் அச்சிடப்பட்ட ஊடகம் மூலம் புத்தாக்குனர்களின் ஆராய்ச்சி மற்றும் பொது விஞ்ஞானம் தொடர்பான தகவல்களை பிரசுரித்தல்.

iii. மாதாந்த கூட்டத்தை முறையாக நடாத்தி புத்தாக்குனர்களுக்கிடையே கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கான சந்தர்ப்பங்களை வழங்குதல்.

### 3.1.2 இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகம்

2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச்சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்கு புலமைச் சொத்து முறைமை மற்றும் நிர்வாகம் தொடர்பாக அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தை தாபித்தல் நோக்கமாக இருந்ததுடன் தேசத்தின் புத்தாக்கங்களை மேம்படுத்துதல், வியாபாரத்திற்கு வசதிகளை வழங்குதல் மற்றும் அறிவினை அடைந்து கொண்ட உலகலாவிய செயற்படுநிலையினை தேசிய பொருளாதாரத்திற்கு ஒன்றிணைத்தல் போன்ற விடயங்கள் முக்கியமானதாகும். அதற்காக புத்தாக்கங்களை பாதுகாப்பதற்கு பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பதிவு செய்தல் மற்றும் நிர்வகித்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

புத்தாக்கமொன்று நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்காக அதனை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்யும் போது புத்தாக்கங்களின் பாதுகாப்பு மிக முக்கியமானதாகையால் பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை மிக விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு புத்தாக்குனர் முயலுதல் வேண்டும். இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான விண்ணப்பப்பத்திரம் நியம மாதிரியின் பிரகாரம் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச்சொத்து அதிகாரச்சட்டத்தின் 78(1) ஆம் உப பிரிவின் நியதிகள் பூர்த்திசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு தாமதமின்றி பேடன்ட் அனுமதிப்பத்திரப் பதிவேட்டில் உரிய விபரங்கள் குறிப்பிடப்பட்டு பேடன்ட் அனுமதிப்பத்திர சான்றிதழ் உரிய ஆவணங்களின் பிரதிகளுடன் விண்ணப்பதாரருக்கு விநியோகிக்கப்பட வேண்டும். பேடன்ட் அனுமதிப்பத்திரமொன்றின் செல்லுபடிக் காலம் அதனைப் பதிவு செய்வதற்காக விண்ணப்பத்திரம் கோவையிலிடப்பட்ட திகதி முதல் இருபது வருடங்களுக்குப் பின்னர் முடிவடைய வேண்டும். மேற்கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 77 ஆம் பிரிவின் பிரகாரம் விண்ணப்பப்பத்திரம் கிடைத்த திகதி, விண்ணப்பப்பத்திரம் கோவையிலிடப்பட்ட திகதியாகக் கருதப்பட்டிருந்தது.

ஏதாவது விண்ணப்பமொன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக உரிய நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனினும் அவ்வாறு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மெதுவான நடவடிக்கைகளைச் செய்து கொண்டிருக்கின்ற 658 விண்ணப்பங்கள் தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 10 வருடங்களுக்கு மேற்பட்ட தாமதக் காலத்துடன் 195 விண்ணப்பங்கள் காணப்பட்டன. அந்த விண்ணப்பங்களுக்கிடையே 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கிடையே கிடைத்த 22 விண்ணப்பங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான தாமதத்திற்கு தாக்கமளித்த நியாயமான காரணங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விண்ணப்பங்களில் காணப்படக்கூடிய குறைபாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

பேடன்ட் அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பிக்கும் போது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்படிவங்களில் குறைபாடுகள் காணப்பட்டால் அது தொடர்பாக விண்ணப்பதாரருக்கு உடனடியாக அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச் சட்டத்தின் 77(2) உப பிரிவின் பிரகாரம் 77(1) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்படாதிருந்ததாக விண்ணப்பப்பத்திரம் கிடைத்த சந்தர்ப்பத்தின் போது பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிந்திருக்குமாயின் தேவையான சீராக்கங்கள் விண்ணப்பித்த திகதி முதல் 03 மாதகால எல்லையில் கோவையிலிடுமாறு அவரினால் விண்ணப்பதாரரிடம் கோர வேண்டியுள்ளது.

அதன் பிரகாரம் விண்ணப்பப்பத்திரத்தின் குறைபாடுகள் அறிவிப்பதற்கு 5 வருடங்களுக்கும் 11 வருடங்களுக்கும் இடையிலான காலவீச்சிலான அதிக

காலத்தை எடுத்த 20 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அந்தக் குறைபாடுகள் அறிவிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களுக்காக 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

மேலும், விண்ணப்பப்பத்திரமொன்றில் குறைபாடுகள் இருக்குமாயின் அதனைப் பரீட்சித்து விரைவாக விண்ணப்பதாரருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு குறைபாடுகளுள்ள 22 விண்ணப்பங்களுக்காக அவற்றை நிராகரிக்கப்பட்டதாக விண்ணப்பங்களுக்க அறிவிப்பதற்கு விண்ணப்பப்படிவம் கோவையிடப்பட்ட திகதியிலிருந்து 04 வருடங்கள் வரையிலான அதிக காலமொன்று எடுத்திருந்த சந்தர்ப்பங்கள் அவதனிக்கப்பட்டன.

(இ) பேடன்ட் அனுமதிப்பத்திரப் பதிவினை புதுபித்தல்

2003 இன் 36 ஆம் இலக்க புலமைச் சொத்து அதிகாரச் சட்டத்தின் 83(2) ஆம் பிரிவின் பிரகாரம் பேடன்ட் அனுமதிப் பத்திரமொன்று அதன் செல்லுபடிக்கால எல்லையில் வலுவுள்ளதாக வைத்துக் கொள்வதற்கு அது கையளிக்கப்பட்ட திகதி முதல் இரண்டாவது வருடம் முடிவடையும் போது குறித்த வருடாந்த கட்டணம் அனுமதிப்பத்திர நலனாளியினால் செலுத்த வேண்டியிருந்ததுடன் பின்னர் வருடத்திற்கு வருடம் அவ்வாறு பதிவினை புதுப்பிக்க வேண்டியும் இருந்தது.

2012 ஆம் ஆண்டு வரையில் 3,398 புத்தாக்கங்களின் எண்ணிக்கைக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தடன் மீண்டும் 518 அனுமதிப்பத்திரங்கள் மாத்திரமே புதுப்பிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் பேடன்ட் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் 15 சதவீதம் வரையான குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பதவியணியினர் முகாமைத்துவம்

பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பரீட்சிப்பதற்காக தேவையான தொழில்நுட்ப ரீதியான அறிவைக் கொண்ட போதியளவான பதவியணியினர் பேடன்ட் பிரிவிற்கு நியமிக்கப்படாதிருந்ததுடன் 2015 பெப்ரவரி மாதம் வரையிலும், பரீட்சிக்கப்பட வேண்டிய 1242 கோவைகளின் அளவொன்று குவிந்து காணப்பட்டன. மேலும் மீள் புதுப்பித்தலுக்கான 518 கோவைகளும் காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. பேடன்ட் பிரிவில் புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவி பெண் உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர் மாத்திரம் சேவையில் இருந்தமையினால் நிறுவனத்திற்குக் கிடைக்கின்ற

விண்ணப்பங்களைப் பரீட்சிப்பதற்கான பதவியணியினர் போதியளவில் இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

ii. புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தருக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை பரீட்சித்து அறிக்கை தயாரிப்பதற்காக பயிற்சியொன்று வழங்கப்படாதிருந்ததுடன் அது பேடன்ட் பிரிவின் செயல்முன்னேற்றத்திற்கு பாதகமாகத் தாக்கமளித்திருந்தது.

பரீட்சிக்கப்பட வேண்டிய கோவைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்தமையினாலும், தற்போது இருக்கின்ற பதவியணியினர் போதியளவில் இல்லாதிருந்தமையினாலும் அவ்வப்போது ஒப்பந்த அடிப்படையிலும், பயிலுனர் அடிப்படையிலும் தற்காலிக பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக அலுவலகத்தில் தகவல்களின் இரகசியத்தைப் பாதுகாத்தல் மிகவும் முக்கியமானதாகையால் இவ்வாறு தற்காலிக பதவியணியொன்றை பயன்படுத்துதல் எவ்விதத்திலும் பொருத்தமற்றிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) பேடன்ட் தரவு முறைமை

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. புலமைச் சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய சேவை சுயசெயற்பாடுகளின் போது தேசிய புலமைச் சொத்துக்கள் அலுவலகத்தின் தரவுகள், கணனிமயப்படுத்தப்பட்ட தரவு முறைமைக்குக் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

ii. புலமைச் சொத்துக்களின் அறிவை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனத்தின் இணையதளம் உலக புலமைச் சொத்து அமைப்புடன் தொடர்பாகவுள்ள போதிலும், தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தில் பேடன்ட் தரவு முறைமை இணையதளத்துடன் தொடர்புபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) புத்தாக்குனர்களுக்கு மதியுரைச் சேவைகளை வழங்குதல் இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கங்கள் ஒத்துழைப்பு நிலையம்

புத்தாக்கங்களின் விளைவுகளை பிரதேச மட்டத்தில் கொண்டு செல்வதை ஊக்குவிப்பதற்காக உலக புலமைச் சொத்து அமைப்பு அறிமுகப்படுத்தியுள்ள தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்கள் ஒத்துழைப்பு நிலையம் ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் பிரதேச சேவை நிலையத்திற்கு அண்மித்ததாக தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இரண்டாவதாக இந்த நிலையம் பல்கலைக்கழகம், நனோ தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் புத்தாக்குனர் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களுக்கு அண்மித்ததாக தாபிப்பதற்கு 2013 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப்பகுதியில் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டின் போது 08 நிலையங்கள் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

ii. தரவு முறைமையில் உள்ளடக்குவதற்காக பேடன்ட் விண்ணப்பத்துடன் தேவைப்படுகின்ற ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரித்து வழங்குதல் தேவையாக இருந்ததுடன் அந்த ஆவணங்களை தயாரிப்பதற்காக விஷேட மதியுரையாளரும் தேவையாக இருந்தது. அலுவலகத்தால் புத்தாக்குனர்களுக்கு அவ்வாறான மதியுரைச் சேவையொன்று வழங்கப்படாமையினால் சமர்ப்பிக்கப்பட்ட முழுமையான மற்றும் சரியான பேடன்ட் அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை ஆகக் குறைந்த எண்ணிக்கையாக இருந்தது.

(எ) பதிவுசெய்யப்பட்ட உப முகவர்கள்

புத்தாக்குனருக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்கும் போது உப முகவர் ஊடாகவும் சமர்ப்பிக்க முடியும். தேசிய புலமைச் சொத்து அலுவலகப் பணிப்பாளர் நாயகத்திற்கு 2003 இன் 36 ஆம் இலக்க தேசிய புலமைச் சொத்து அதிகாரச் சட்டத்தின் 175 ஆம் பிரிவின் பிரகாரம் உப முகவர்கள் பதிவு செய்ய வேண்டியிருந்ததுடன் அந்தப் பதிவு 03 வருடங்களுக்கு வரையறுக்கப்பட்டமையால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்துவதன் அடிப்படையில் தொடர்ச்சியாக 3 வருட காலத்திற்காக புதுப்பிக்கப்படுகின்றது. இவ்வாறு 2012, 2013 மற்றும் 2014 (2014 செப்தெம்பர் 15 வரை) ஆம் ஆண்டுகளின் போது உப முகவர்கள் முறையே 38, 42 மற்றும் 23 என பதிவு செய்திருந்தனர். இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 2006 மே 17 ஆந் திகதிய 1445/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் உப முகவர்களைச் சேர்த்தல் மற்றும் பதிவு செய்வதற்காக பரீட்சையொன்று அவர்களினால் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உதவியுடன் நடாத்துவதற்கு பணிப்பாளர் நாயகத்திற்கு முடியுமாக உள்ளது. எனினும் உப முகவர்களைப் பதிவு

செய்வதற்கோ அல்லது ஆட்சேர்ப்பதற்கோ இந்தப் பரீட்சையை நடாத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. அதிகாரச்சட்டத்தின் 175 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியொருவர் உப முகவராக நியமிக்கப்படுவதுடன் அவரினால் பேடன்ட் விண்ணப்பதாரிடமிருந்து அறவிட வேண்டிய கட்டணம் தொடர்பான ஏற்பாடுகள் விதிக்கப்படாதிருந்தமையால் பல்வேறு கட்டண அளவுகளில் அறவிடக்கூடியதாக இருந்தது.

**மதிப்பீடு**

i. பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பதிவு செய்வதற்காக அதிக காலம் எடுத்தமையால் புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பான நம்பிக்கை மற்றும் புத்தாக்கங்களை வணிக மயப்படுத்தும் போது பேடன்ட் அனுமதிப்பத்திரத்தில் உள்ள முக்கியத்துவம் குறைந்து காணப்பட்டமை.

ii. புதிய சட்ட, விதிகளைத் தயாரித்தல், பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பதிவு செய்தல், கணனிமயப்படுத்துதல், தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கங்களுக்கான ஒத்துழைப்பு நிலையங்களைத் தாபித்தல், தகுதியான உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமை மற்றும் உப முகவர் நடவடிக்கைகள் முறையானதாகக் காணப்படாமை போன்ற செயற்பாடுகள் பூரணமான நிலையில் காணப்படாமையினால் புத்தாக்குனர்களுக்கு செயற்திறனான சேவையொன்று கிடைக்கப்பெறாமை.

**பரிந்துரை**

i. பேடன்ட் பிரிவிற்கு போதியளவான பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட தகைமைகளுடன் உத்தியோகத்தர்களைச் சேர்த்தல் மற்றும் கைத்தொழில் திட்டமிடல் மற்றும் வியாபார இலட்சணை பிரிவுகளில் காணப்படுகின்ற பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பான வெளிநாட்டு பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்களை தற்காலிகமாக பேடன்ட் பிரிவில் ஈடுபடுத்தி தாமதமாகவுள்ள விண்ணப்பங்களின் செயற்பாடுகளை பூர்த்தி செய்தல்.

ii. பேடன்ட் விண்ணப்பதாரர்களுக்கு போதியளவான மதியுரைச் சேவையொன்றையும் மொழிபெயர்ப்புச் சேவையினையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

iii. தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கங்களுக்கான ஒத்துழைப்பு நிலையங்களை தாபிப்பதைத் துரிதப்படுத்தி தகைமை பெற்ற உத்தியோகத்தர்களை நியமித்தல்.

iv. தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் தரவுகளை இணையதளத்துடன் தொடர்புபடுத்துதல் மற்றும் பேடன்ட் தரவுகைள முழுமையாகக் கணனிமயப்படுத்துதல்.

v. உப முகவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையை நடாத்தி தொழில்நுட்ப அறிவுள்ள உப முகவர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

vi. பதிவுசெய்துள்ள உப முகவர்களினால் புத்தாக்குனர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற கட்டணங்கள் தொடர்பாக ஏற்பாடுகளை விதித்தல் மற்றும் இலகு கட்டணங்களை நிர்ணயித்தல்.

**3.2 புத்தாக்குனர்களுக்கு வழங்கப்படுகின்ற பல்வேறு நிதி உதவிகள்**

**3.2 புத்தாக்குனர்களுக்காக நிதிஉதவி வழங்குதல்**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை புத்தாக்குனர் நிதியம்

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச் சட்டத்தின் 11(1)(ஆ) உப பிரிவின் பிரகாரம் புத்தாக்குனர்களுக்கு தமது ஆக்கங்களுக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்ட புத்தாக்கங்கள் அல்லது பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட புத்தாக்கங்கள் அல்லது அந்த ஆக்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் உற்பத்தி செய்வதற்காக நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அந்த புத்தாக்குனர்களுக்கு மேலும் ஊக்கப்படுத்த வேண்டியுள்ளது. இந்த நோக்கங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிதியத்தில் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மீதி ரூபா 2,543,450 ஆக இருந்ததுடன் அந்த ஆண்டின் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் விஞ்ஞான தொழில்நுட்ப அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 3,500,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக அவ்வாண்டின் போது நிதியத்தின் மூலம் ரூபா 2,041,629 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை புத்தாக்க நிதியத்தின் எஞ்சிய மீதி ரூபா 4,001,821 ஆக இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டிற்காக அமைச்சினால் ரூபா 8,000,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 10,484,297 தொகையொன்று சேமிக்கப்பட்டமையால் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக முழுமையாக இந்த நிதியத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புத்தாக்குனர்களுக்காக நிதிஉதவி வழங்குதல்

2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் புத்தாக்குனர் ஆணைக்குழு புத்தாக்குனர்களின் மேம்பாட்டிற்காக நிதியினை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிதி உதவி கோரும் 40 பேர்களில் தெரிவு செய்யப்பட்ட எட்டு பேர்களுக்கு மாத்திரம் கீழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் நிதி உதவியாக ரூபா 2,937,176 தொகை வழங்கப்பட்டிருந்தது.

| புத்தாக்கங்கள் | வழங்கப்பட்ட நிதிஉதவி |
|---|---|
| | ரூபா |
| சேதனக் கிருமி நாசினி | 240,000 |
| கச்சான் வெட்டும் இயந்திரம் | 50,000 |
| சேதனப் பசளை | 1,062,000 |
| மனித உடற்கூறுகளின் செயற்படு நிலையை வெளிப்படுத்தும் மாதிரி | 100,000 |
| ஈர்க்கில் சுத்தம் செய்யும் இயந்திரம் | 25,000 |
| வெங்காயம் வெட்டும் இயந்திரம் | 50,000 |
| ஊனமுற்றோருக்கான இயந்திரம் | 1,209,976 |
| சுற்றாடலுக்கு இசைவான சிறுவர் விளையாட்டு உபகரணம் | 200,000 |
| | 2,937,176 |



பாடசாலை புத்தாக்குனர்களின் கச்சான் வெட்டும் இயந்திரம்

(இ) புத்தாக்குனர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல்

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 11(1)(ஈ) ஆம் உப பிரிவின் பிரகாரம் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் பரவலாக்குவதற்கும் அவர்களின் பேடன்ட் உரித்தை மாத்திரம் பிணையாக வைத்து, நீண்ட காலக் கடன் வழங்குவதற்கு அரசாங்கத்தின் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு முடியுமான வகையில் இலங்கைக்கு வேலைப் பங்களிக்கும் புத்தாக்கங்கள் தொடர்பாக அந்த நிறுவனங்களுக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல் ஆணைக்குழுவின்

நோக்கமாகும். இதன் போது புத்தாக்குனர்களுக்கு வழங்க வேண்டிய கடன் பணத்தின் பெறுமதி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது. இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

i. 2012 ஆம் ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகள் முதல் ஆணைக்குழுவினால் புத்தாக்குனர்களுக்கு கடன் பணம் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் கடன் பணம் புத்தாக்கங்களை வணிகமயப்படுத்தியதன் பின்னர் கிடைக்கின்ற நலனிலிருந்து மீளச் செலுத்த வேண்டியிருந்த போதிலும், புத்தாக்குனர்களினால் புறக்கணிக்கப்பட்டமையால் மேலும் கடன் வழங்குதல் நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் அதிகாரச் சட்டத்தின் 22(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர்களின் நிதியம் ஆரம்பிக்கப்பட்டு புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் 3.2.1(ஆ) பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளது.

ii. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட ''சஹசக் நிமெவும்'' கண்காட்சியின் போது மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட முப்பது புத்தாக்குனர்களுக்கு அது தொடர்பாக அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்ட வினாக்கொத்திற்கு வழங்கப்பட்ட பதிலின் பிரகாரம் புத்தாக்கங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும், உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்கும் புத்தாக்குனர்களுக்கு நிதிஉதவி தேவையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றை வணிகமயப்படுத்துவதற்கும் போதியளவான நிதிரீதியான இயலுமை காணப்படாமையால் புத்தாக்கங்களை தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு முடியாதிருந்தமை.

**பரிந்துரை**

i. புத்தாக்குனர்களின் ஆக்கங்களை வணிகமயப்படுத்துவதற்காக நீண்டகால நிதிச் சலுகையொன்று வழங்க வேண்டியிருந்ததுடன் இலங்கை புத்தாக்குனர் நிதியத்தை முழுமையாகப் பயன்படுத்துதல்.

ii. நிதிஉதவி வழங்கியதன் பின்னரும் உரிய புத்தாக்குனர்கள் தொடர்பாக முறையான பின் தொடர் நடவடிக்கைகளை அமுல்படுத்துதல்.

### 3.2.2 புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான உதவி வழங்குதல்

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் புத்தாக்கங்களுக்காக தேவையான ஆராய்ச்சிக்கூட வசதிகள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப ரீதியான வசதிகளை வழங்குதல் ஆணைக்குழுவின் நோக்கமாகும். இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

(அ) தொழில்நுட்ப உதவி கோரல் தொடர்பாக செயற்படல்

ஆணைக்குழுவிற்கு புத்தாக்குனர்கள் தமது புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கு 06 தொழில்நுட்ப உதவி கோரல்களுக்காக கடிதம் மூலம் உரிய நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், அதன் பின்னர், புத்தாக்கங்களுக்கு என்ன நடந்தது என வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

மேற்கூறப்பட்ட பிரகாரம் உரிய புத்தாக்கங்களுக்கு முன்னிற்றல் போதியளவான வகையில் இருந்தமையை ஏற்றுக் கொள்ள முடியாதிருந்ததுடன் அதில் உரிய ஆக்கங்களுக்கு பின்னர் என்ன நடந்தது என பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் அபிவிருத்தி செய்யவேண்டிய ஆக்கங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல்

2012 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட ‘‘சஹசக் நிமெவும்’’ கண்காட்சிக்காக சமர்ப்பிக்கப்பட்ட 07 புத்தாக்கங்களை சந்தைக்குச் சமர்ப்பிப்பதற்கு முடியுமான நிலையில் ஆக்கங்கள் காணப்படாமையினால் மேலும் அபிவிருத்தி செய்து சந்தைக்கு வழங்குவதன் மூலம் நுகர்வோர்களின் விருப்பம் மற்றும் தேவைகளை நிறைவேற்றுதல் மற்றும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பொருட்களைப் பூர்த்தி செய்து உற்பத்தி செய்தல் தேவையாக இருந்தது. அந்த புத்தாக்கங்களை வணிக நிலைக்கு உட்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினைப் பெற்றுக் கொள்வதற்கு நிறுவனம் முன்வராமையினால் அந்த புத்தாக்கங்கள் வணிக மயப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இதன் பிரகாரம் இந்த விஞ்ஞான ரீதியான சகல கண்டுபிடிப்புக்களையும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தியிருந்த போதிலும், அந்த புத்தாக்குனர்களை மேலும் ஊக்குவிப்பதற்கோ அல்லது அந்த ஆக்கங்களின் மூலம் பயனுள்ள உற்பத்தியொன்றை நாட்டிற்கு ஒன்றுசேர்ப்பதற்கோ இருந்த சந்தர்ப்பம் சரியான வகையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்படவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டில் ‘‘சஹசக் நிமெவும்’’ கண்காட்சியில் விருதுபெற்ற புத்தாக்குனரால் உருவாக்கப்பட்ட முள்ளந்தண்டு எலும்புகளில் வேதனையை சமநிலைப்படுத்தி வலிநீக்கும் உபகரணமொன்று வெற்றியளித்திருந்தது. அந்த உபகரணத்தை மேலும் அபிவிருத்தி செய்து நோயாளர்களுக்கு பயன்படுத்தக்கூடியதாக இருந்தமை ஆயுர்வேத திணைக்களத்தின் உதவி ஆணையாளரால் (பயிலுனர்) அனுப்பப்பட்ட 2012 நவம்பர் 22 ஆந் திகதிய 6-1-3-11 ஆம் இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் தேவையான பகுதியைப் பயன்படுத்தி அந்த உபகரணத்தை நோயாளர்களுக்கு இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அதனை வணிகமயப்படுத்துவதற்கோ அல்லது நோயாளர்களுக்கு பயன்படுத்தவதற்கோ சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. அந்த புத்தாக்குனர்கள் உபகரணங்களைப் பயன்படுத்தி முறைமை மற்றும் தேவையான ஆலோசனைகள் வழங்கி நோயளர்களுக்கு ஒழுங்குமுறையான சிகிச்சையளித்தல் தங்களினால் மேற்கொள்ள வேண்டியமையால் நோயாளர்களை நிறுத்தி வைப்பதற்கு நிலையமொன்றைத் தாபிப்பதற்கு காணியொன்று தேவையாக இருந்ததாகக் கோரப்பட்டிருந்தது.

ஆயுர்வேத போதனா வைத்தியசாலை மற்றும் ஆயுர்வேத பரிசோதனை நிறுவனம் என்பவற்றிற்கு இந்த உபகரணங்கள் தொடர்பாக மேலும் சிகிச்சை பரிசோதனையொன்றை மேற்கொள்வதற்கு தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு அனுப்பப்பட்டதாக உதவி ஆணையாளர்கள் (பயிலுனர்) இந்த தயாரிப்பாளர்களுக்கு 2013 யூலை 01 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நோயாளர்களுக்காக இந்த உபகரணங்களை வெற்றிகரமாகப் பயன்படுத்துவதற்கு ஆயுர்வேதத் திணைக்களத்திலிருந்து பெறவேண்டிய பரிந்துரை 2015 திசெம்பர் வரையிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

| பின்முள்ளந்தண்டிற்கு மற்றும் கழுத்திற்கு இலகுபடுத்தும் சென்ஸ் டெக் உபகரணம் |
| --- |
| இந்த விஷேட உபகரணம் மூலம் பிழையான வகையில் அமர்வதால் பாரத்தால் ஒரு பக்கம் விழுதல் அல்லது வீக்கத்தால் கழுத்திற்கு அல்லது முதுகிற்கு ஏற்படுகின்ற நோவினை இலகுபடுத்துதல். உபகரணத்தின் பந்துகளின் மூலம் நரம்பு நெருக்கம் மற்றும் குருதியமுக்க ஒத்தனங்கள் அகற்றப்பட்டு நோவினை இலகுபடுத்துகின்றது. இதனை நீங்கள் 15-30 நிமிட கால எல்லையில் செய்யவேண்டியிருந்ததுடன் சில காலம் இந்த உபகரணம் விளைவற்றுக் [illegible] |



(இ) பேடன்ட் அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு முன்னிற்றல்

புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்குதல் ஆணைக்குழுவின் நோக்கமாக இருந்ததுடன் 1979 இன் 53 ஆம் இலக்க புத்தாக்குனர்கள் ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 11(1)(அ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு தீர்மானிக்கின்ற நியதிகளினதும் நிபந்தனைகளினதும் கீழ் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களுக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க முடியுமா எனத் தீர்மானிக்கும் வகையில் அவற்றைப் பரீட்சித்ததன் பின்னர் அந்த புத்தாக்குனர்களுக்கு தொழில்நுட்ப ரீதியான உதவிகளை வழங்குதல் மற்றும் பேடன்ட் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான விண்ணப்பப்படிவங்களை தயாரிப்பதற்கு அவர்களுக்கு உதவுதல் என்பன ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்களாகும். அது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு.

i. மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 21 ஆவது பிரிவின் பிரகாரம் பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பாக தேவையான பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக பரீட்சிக்கும் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் விண்ணப்பப் பத்திரம் தயாரிக்கும் போது உதவும் வகையில் பிரத்தியேக உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் அந்தப் பிரிவின் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பேடன்ட் அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பங்களைத் தயாரித்தல் தொடர்பாக பயிற்சியொன்று வழங்கப்பட்டிருந்தது.

ii. மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 13 ஆவது பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டதன் பிரகாரம் இலங்கை கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்திலோ அல்லது அரசாங்கத்தின் ஏனைய ஏதாவது பயிற்சி நிறவனத்திலோ ஆய்வுகூட வசதிகள் மற்றும் சேவை தேவைப்படுகின்ற புத்தாக்குனர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் அந்த வசதிகள் மற்றும் சேவைகள் வழங்க வேண்டியுள்ளது. ஆணைக்குழுவிற்கு சுயமான ஆய்வுகூட வசதிகள் மற்றும் சேவைகளை வழங்கும் போது அதில் ஏதாவதொரு நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்ற சகல செலவினங்களும் ஆணைக்குழுவால் அறவிட வேண்டியுள்ளது. எனினும் புத்தாக்குனர்களுக்கு இவ்வாறு ஆய்வுகூட வசதிகளை வழங்குவதற்கு வேலைத்திட்டமொன்று இதுவரையிலும் அமுல்படுத்தப்படாதிருந்ததுடன் எதிர்காலத்தில் அவ்வாறான வேலைத் திட்டமொன்று தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

iii. மேற்கூறப்பட்ட அதிகாரச்சட்டத்தின் 11(1)(எ) உப பிரிவின் பிரகாரம் அதிகாரம் வழங்கப்பட்ட புத்தாக்குனர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் சுயமாக அங்கீகரிக்கப்பட்ட புத்தாக்கங்கள் மற்றும் ஆராய்ச்சிகளைச் செய்வதற்காக அல்லது சேவைகளை பூரணப்படுத்துவதற்காக ஆராய்ச்சி ஆய்வுகூடம் அல்லது ஒத்திகை பார்க்கும் நிலைய வசதிகள் மற்றும் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் பொது ஆராய்ச்சி ஆய்வுகூடம் மற்றும் ஒத்திகை பார்த்தல் நிலையமொன்றைத் தாபித்து நடாத்திச் செல்லல் ஆணைக்குழுவின் நோக்கமாகும். எனினும் இது வரையிலும் புத்தாக்குனர்களுக்காக அவ்வாறான வசதிகளை வழங்கும் நிலையமொன்று காணப்படாதிருந்ததுடன் எதிர்காலத்திலும் அவற்றை தாபிப்பதற்கான திட்டங்களும் தயாரிக்கப்படவில்லை.

### 3.2.3 புத்தாக்குனர்களுக்கு சட்ட உதவிகளை வழங்குதல்

ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்படுகின்ற நியதிகளினதும் நிபந்தனைகளினதும் கீழ் புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப் பத்திரத்திற்கான விண்ணப்பப்பத்திரம் இலங்கையிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலிருந்தோ சமர்ப்பிக்கும் போது அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேடன்ட் உரித்து தொடர்பான வழக்குகளின் போது புத்தாக்குனர்களின் பாதுகாக்கப்பட்ட பேடன்ட் உரித்தை மீறுபவைகளிலிருந்து பாதுகாத்து அவர்களுக்கு சட்ட உதவிகள் வழங்க வேண்டியிருந்ததுடன் 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 21(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட பிரிவும் தாபிக்கப்பட வேண்டியுள்ளது. எனினும் இது வரையிலும் அவ்வாறான சட்டப்பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் பட்டியலிலும் சட்ட உத்தியோகத்தர் பதவி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

அதன் பிரகாரம் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவின் கீழ் சுடப்பிரிவொன்று தாபிக்கப்படாமை மற்றும் சட்ட உத்தியோகத்தரொருவர் காணப்படாமையினால் புத்தாக்குனர்களின் உரிமைகளுக்காக தோன்றுவதற்கு முடியாமையின் காரணமாக புத்தாக்கங்களை பாதுகாப்பதற்காக கட்டாயமாக முன்னிப்பதற்கு முடியாதிருந்தது.

**மதிப்பீடு**

புத்தாக்கங்களை உருவாக்குவதற்காக ஊக்குவித்தல் பாதுகாத்தல் மற்றும் அவற்றை வணிகமயப்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் தேவையான தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான ஒத்துழைப்பு போதியளவான பிரகாரம் கிடைக்காமையின் காரணமாக புத்தாக்குனர்களை ஊக்குவிப்பதற்கும் பாதுகாப்பதற்கும் இடையூறாக இருந்தமை .

**பரிந்துரை**

i. தொழில்நுட்பரீதியான மற்றும் சட்ட உதவிகளை புத்தாக்கங்களுக்காக வழங்குவதற்கு முடியுமான வகையில் பொருத்தமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்தல்.

ii. புத்தாக்கங்கள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக உதவுதல்

iii. தொழில்நுட்ப மற்றும் சட்ட உதவிகளை வழங்கியதன் பின்னர் அந்த ஆக்கங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்.

iv. கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் அல்லது அரசாங்கத்தின் ஏதாவது ஆராய்ச்சி நிறுவனமொன்று அல்லது ஆய்வுகூட வசதிகள் மற்றும் ஏனைய சேவைகள் தேவைப்படுகின்ற புத்தாக்குனர்களுக்கு அந்த வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

**3.3 புத்தாக்குனர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்**

இலங்கைப் பிரஜைகளுக்கு புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு அல்லது உருவாக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்கு தைரியத்தை வழங்குதல் ஆணைக்குழுவின் பிரதான நோக்கமாகும். 1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச் சட்டத்தின் 11(1)(ஊ) பிரிவின் பிரகாரம் விவசாயம், இரசாயனம், விஞ்ஞானம், தேசிய பாதுகாப்பு மற்றும் மருத்துவமுறை, பௌதீக விஞ்ஞானம், பொதுமக்கள் பாதுகாப்பு, நலன்புரி, பொது வேலைகள் மற்றும் போக்குவரத்து போன்ற துறைகளிலும் மற்றும் ஏனைய அவ்வாறான விஞ்ஞானரீதியான மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் எருவாக்கங்களுக்காக இலங்கையில் பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட புத்தாக்கங்கள், சனாதிபதி விருது விழாவிற்காக பெயர் குறிப்பிடுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட ஆராய்ச்சி போட்டியொன்றை வருடாந்தம் நடாத்துதல் ஆணைக்குழுவின் பிரதான பணியாகும். அவ்வாறான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்ட சில விஷேட நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

**3.3.1 சஹசக் நிமெவும் கண்காட்சி**

இலங்கையின் தேசிய புத்தாக்கங்களின் கண்காட்சியான ‘‘சஹசக் நிமெவும்’’ கண்காட்சி சகல வருடங்களிலும் புத்தாக்குனர்களுக்காக ஒதுக்கப்பட்ட ஒரே மேடையில் தமது உற்பத்தி இயலுமையை நாட்டிற்குக் காண்பிப்பதற்கு, விருதினை உரித்தாக்கிக் கொள்வதற்கும் மற்றும் முதலீட்டாளர்களைச் சந்திப்பதற்கு மாகாண மட்டத்தில் புத்தாக்கங்களை தெரிவு செய்து சமர்ப்பிக்கின்ற கண்காட்சியாக இருந்தது.

போட்டியின் வெளிப்படை, ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் கீழ் சகல புத்தாக்கங்களும் வெளிப்படைக்கு உட்படும் வகையில் மேற்கொள்வதற்காக ஆணைக்குழுவினால் நடவர் சபை நியமிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கண்காட்சிக்காக பிரதிநிதித்துவப்படுத்தும் துறை

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட 22 துறைகளின் கீழ் திறந்த, பல்கலைக்கழகம், பாடசாலை மற்றும் வணிகம் என்ற பிரிவுகளின் கீழ் புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களை காட்சிப்படுத்துவதற்காக ''சஹசக் நிமெவும்'' நடாத்தப்படுகின்றது. அதற்குரிய அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தது.

i. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஒட்டு மொத்த புத்தாக்கங்கள் முறையே 9 சதவீதம் மற்றும் 73 சதவீதமாக சிறிய மற்றும் விரைவான குறைவொன்றைக் காண்பித்தது. 2013-2015 ஆண்டுகளின் தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது 600 புத்தாக்கங்கள் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியான புத்தாக்கங்களின் எண்ணிக்கை 226 மாத்திரமாக இருந்தமையால் உரிய இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

ii. 2012 ஆம் ஆண்டின்போது திறந்த, பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை போன்ற மூன்று பிரிவுகளும் புத்தாக்குனர்களின் முன்வருகை 60 சதவீதத்தை விடக் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் முறையே 53 சதவீதம் மற்றும் 88 சதவீதமாக பாடசாலைப் பிரிவின் சமர்ப்பித்தல் விரைவாகக் குறைவடைந்திருந்தது. அதற்கு காரணமாக கண்காட்சிக்காக தெரிவு செய்யும் போது பயன்படுத்தப்பட்ட மாதிரிகள் மாற்றமடைந்ததுடன் போட்டிக்காக முன்வருதலில் குறைவும் அவதானிக்கப்பட்டது.

iii. உயர் சந்தையின் தேவையினை எதிர்பார்க்க முடியாமையினால் கீழ் மட்டத்தில் புத்தாக்கங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற திறந்த மற்றும் பாடசாலை பிரிவுகளின் மூலம் அதிகரித்த சதவீதமொன்றும் மற்றும் சந்தைத் தேவையினை எதிர்பார்க்கக்கூடிய புத்தாக்கங்களை சமர்ப்பித்த வணிகப் பிரிவின் மூலம் குறைந்த சதவீதமொன்று கண்காட்சியின் போது பிரதிநிதித்துவப்படுத்துகின்றமை இதன் போது குறிப்பாகத் தென்பட்டது.

(ஆ) புத்தாக்கங்களைச் சமர்ப்பித்தல்

2014 ஆம் ஆண்டில் சஹசக் நிமெவும் கண்காட்சிக்காக புத்தாக்கங்கள் பலதரப்பட்ட 13 துறைகளின் கீழ் சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பங்கள் உருவாகியிருந்தது.

இந்தத் துறைகளில் உருவான புத்தாக்கங்கள் ஒப்பீட்டு ரீதியில் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்ட போதிலும் அந்த உருவாக்கங்களுக்கிடையே மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்டிருந்த புத்தாக்கங்களின் எண்ணிக்கை மிகவும் திருப்திகரமான நிலையில் காணப்பட்டது.

ஆணைக்குழுவினால் தேசிய முக்கியத்துவமுடைய துறைகளாக அங்கவீனர் உபகரணங்கள், உணவுப் பாதுகாப்பு, சுற்றாடலைப் பாதுகாத்தல், வலுசக்தியை பாதுகாத்தல், மனிதப் பாதுகாப்பு, கற்பித்தல் உசாத்துணை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக மாதிரியின் அடிப்படையில் இனங்காணப்பட்டிருந்ததுடன் இந்தக் கண்காட்சியின் போது பிரதிநிதித்துவப்படுத்திய இந்த துறைகளில் ஊனமுற்றோர் உபகரணங்கள் 4 சதவீதம், சுற்றாடலைப் பாதுகாத்தல் 8 சதவீதம், கற்பித்தல் உசாத்துணை 6 சதவீதம் என குறைந்த சதவீதத்தைக் கொண்டிருந்தன.

(இ) புத்தாக்குனர்களை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்

ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நடுவர் சபை மூலம் மேற்கூறப்பட்ட துறைகளில் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களைத் தெரிவு செய்து வெற்றியாளர்களுக்கு பணப்பரிசு மற்றும் சான்றிதழ் என்பன கையளிக்கப்படுகின்றது. சஹசக் நிமெவும் கண்காட்சிக்கு போட்டியிட்ட புத்தாக்குனர்களில் சிறந்த புத்தாக்கங்களுக்காக ‘‘தாசிஸ் சம்மானய’’ இற்காக ரூபா 750,000 பணப் பரிசுடன் சான்றிதழும், தேசிய விருதாக பிரதான போட்டிப் பிரிவான பாடசாலை, திறந்த, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் வணிகப் பிரிவுகளின் கீழ் முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது இடங்களில் வெற்றியீட்டிய புத்தாக்கங்களுக்காக முறையே ரூபா 100,0000 ரூபா 50,000 மற்றும் ரூபா 25,000 ஆக பணப் பரிசும் சான்றிதழ் பத்திரமும் தொழில்நுட்பத் துறைகளுக்காக தெரிவு செய்யப்பட்ட சிறந்த புத்தாக்கங்களுக்காக ரூபா 200,000 பணப் பரிசும், வெற்றிக் கிண்ணம் மற்றும் சான்றிதழ் பத்திரம் என்பன கையளிக்கப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட 13 துறைகளுக்காக 52 போட்டிச் சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் 6 சந்தர்ப்பங்களுக்காக எந்தவொரு போட்டியாளரும் முன்வந்திருக்கவில்லை. அவ்வாறே பாடசாலைப் பிரிவு தவிர போட்டியாளர்கள் முன்வந்த 34 போட்டிச் சந்தர்ப்பங்களுக்காக முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது 102 வெற்றிச் சந்தர்ப்பங்கள் காணப்பட்ட

போதிலும் வழங்கப்பட்ட வெற்றியீட்டல்கள் 47 ஆக இருந்ததுடன் வெற்றியினை வழங்கும் வரையில் போதியளவான புத்தாக்கங்கள் சமர்ப்பிக்கப்படாமை அதற்கு காரணமாக அவதானிக்கப்பட்டது.

**மதிப்பீடு**

இனங்காணப்பட்டுள்ள புத்தாக்க துறைகள் மற்றும் உருவாக்கப்பட்ட புத்தாக்கங்களை கவனத்தில் கொள்ளுமிடத்து 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஆக்கங்களின் எண்ணிக்கையில் குறைவொன்று காணப்பட்டமை மற்றும் சந்தைத் தேவையொன்றை எதிர்பார்க்கக்கூடிய உற்பத்திகள் தோற்றுவிக்கப்படாமையினால் தேசிய முக்கியத்துவமுள்ளது என கண்டறியப்பட்ட துறைகளுக்குரிய உற்பத்தியின் ஆகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளமை போன்ற விடயங்களைக் கவனத்தில் கொள்ளும் போது தேசிய பொருளாதாரத்திற்கு ஏற்படுத்தக்கூடிய பங்களிப்பு திருப்திகரமான நிலையில் காணப்படவில்லை.

**பரிந்துரை**

i. சந்தைக் கேள்வியொன்றை எதிர்பார்க்ககூடிய வகையில் புத்தாக்கங்கள் சஹசக் நிமெயும் கண்காட்சிக்கு சமர்ப்பிப்பதற்கு ஊக்குவித்தல்.

ii. புதிய கணனி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கணனித்துறை சார்ந்த புதிய கண்டுபிடிப்புக்களுக்காக அதிக கவனம் செலுத்துவதன் மூலம் அத்துறையில் புதிய கண்டுபிடிப்புக்களுக்கான ஆர்வத்தை எற்படுத்துதல்.

### 3.3.2 புத்தாக்கங்கள் தொடர்பாக சனாதிபதி விருது

1979 இன் 53 ஆம் இலக்க இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச் சட்டத்தின் 11(1)(ஊ) உப பிரிவின் பிரகாரம் கமநல, இரசாயனவியல், மருத்துவ விஞ்ஞானம், தேசிய பாதுகாப்பு, மூலிகை மருந்து, பௌதீகவியல், பொது வேலைகள், போக்குவரத்து, பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நலன்புரி போன்ற துறைகளில் மற்றும் ஏனைய அவ்வாறான விஞ்ஞான ரீதியான துறைகளில் இலங்கையிலும் பேடன்ட் அனுமதிப்பத்திரம் கிடைத்த புத்தாக்கங்களுக்காக வருடாந்தம் சனாதிபதி விருது வழங்கப்படுகின்றது.

(அ) புத்தாக்கங்கள் தொடர்பான சனாதிபதி விருது வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் பேடன்ட் அனுமதிப்பத்திரம் பெறும் புத்தாக்கங்களின் அளவு குறைவடைந்தமையினால் சனாதிபதி விருதிற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் மிகவும் குறைவான எண்ணிக்கையாக இருந்தமையினால் 02 வருடங்களுக்கு ஒரு தடவை அவ்விருதினை நடாத்துவதற்கு

தீர்மானிக்கப்பட்டிருந்தது. 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது முறையே 29, 44 மற்றும் 17 விண்ணப்பதாரர்கள் சனாதிபதி விருதிற்காக விண்ணப்பத்திருந்தனர்.

(ஆ) இதன் போது ஜெனீவா சர்வதேச மாநாட்டு விழாவிற்காக மாத்திரம் புத்தாக்குனர்கள் பரிந்துரை செய்யப்பட்டிருந்ததுடன் 04 புத்தாக்கங்களுக்காக 2014 ஆம் ஆண்டின் போது விருது வழங்கப்பட்டிருந்தது.

### 3.3.3 நியாயமான நடுவர் தீர்ப்பு

புத்தாக்கங்கள் தொடர்பாக நடுவர் தீர்ப்பின் போது நடுநிலைமையாக மதிப்பிடும் இயலுமையானது புத்தாக்கங்களின் மதிப்பீடு தொடர்பான நடுவர் சபைக்கு உரித்தாக இருக்க வேணடியள்ளது. இந்த நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்பட வேண்டிய ஆலோசணைகளை உள்ளடக்கிய நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயலமர்வுகள் முறையாக ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம்,

(அ) புத்தாக்கங்களை நடுவர் தீர்ப்பு செய்தல் தொடர்பான செயலமர்வொன்று 2013 மே மாதம் 03 ஆந் திகதி சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் ரூபா 135,318 செலவினத்தில் நடாத்தப்பட்டிருந்ததுடன் பங்குபற்றிய பாடசாலை, பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற பிரிவுகளில் முறையே 51 சதவீதம், 75 சதவீதம் மற்றும் 79 சதவீதமாக இருந்தன.

(ஆ) குறித்த நியதிகள், சட்டங்கள் மற்றும் பிரமாணங்கள் இன்மையினால் நியாயமான நடுவர் தீர்ப்பை மேற்கொள்ள முடியாதெனக் குறிப்பிடப்பட்ட 02 முறைப்பாடுகள் சமர்ப்பிக்க்பபட்டிருந்தன.

**மதிப்பீடு**

i. போட்டித் தீர்ப்பிற்குரிய சட்டங்கள், பிரமாணங்கள் பின்பற்றப்படாமையின் காரணமாக புத்தாக்குனர்கள் தைரியம் இழந்தமை.

ii. தீர்ப்பு நியாயமாக இல்லாமையினால் எதிர்காலத்தில் போட்டிகளில் பங்குபற்றாமை.

iii. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு தொடர்பாக புத்தாக்குனர்களின் நம்பிக்கை விழ்ச்சியடைந்தமை.

**பரிந்துரை**

i. போட்டித் தீர்ப்பிற்காக குறித்த நியதிகள், சட்டங்கள் மற்றும் பிரமாணங்களை உள்ளடக்கிய ஆலோசனைக் கோவையொன்றைத் தயாரித்தல்.

ii. அந்த ஆலோசனைக் கோவை சகல தீர்ப்பாளர்களினாலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளல்.

iii. நடுவர் சபையினால் தீர்ப்பாளர், போட்டியாளர்களுடன் நெருங்கிய தொடர்பொன்று இன்மையை உறுதிப்படுத்தல்.

**3.3.4 பீனிக்ஸ் செயற்திட்டம்**

2013 நவம்பர் 30 ஆந் திகதி முதல் திசெம்பர் 02 வரை நடாத்தப்பட்ட ‘‘சஹசக் நிமெவும்’’ தேசிய புத்தாக்குனர் கண்காட்சியின் ஆரம்ப சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட எதிர்பாராத தீ விபத்தின் காரணமாக பல்கலைக்கழகம், திறந்த மற்றும் வணிகவியல் போன்ற பிரிவுகளின் கண்காட்சி மற்றும் போட்டியை நடாத்துவதற்கு முடியாதிருந்தது. கண்காட்சிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 839 புத்தாக்கங்களில் 178 ஆக்கங்கள் தீயினால் அழிவடைந்திருந்தது. அதன் காரணமாக ஆணைக்குழுவினால் பீனிக்ஸ் செயற்திட்டத்தின் கீழ் சகல பரிசுதாரர்களான இலங்கையர்களுக்கு திறந்த அழைப்பு விடுத்து தீயினால் அழிவடைந்த புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்து வணிகமயப்படுத்தும் வரை கொண்டுசெல்வதற்கு பல்வேறு வகையிலும் உதவி கோரப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் தனியார் கம்பனியிலிருந்து வழங்கப்பட்ட நிதி உதவிகளின் மூலம் புத்தாக்குனர்களுக்கு அவர்களின் அழிவடைந்த 151 புத்தாக்கங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்காக ரூபா 4,425,243 தொகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் இடருக்கு உட்பட்டிருந்த 27 புத்தாக்குனர்களின் புத்தாக்கங்களின் மூல அடிப்படையை (Prototype) கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கியமைக்கு கணக்காய்விற்குத் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இன்னும் இருபதுபேருக்கு ரூபா 72,910 பெறுமதியான காசோலை விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் வருகைதராமையின் காரணமாக, அது நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**மதிப்பீடு**

பீனிக்ஸ் செயற்திட்டத்தின் கீழ் தீயினால் அழிவடைந்த புத்தாக்கங்களுக்காக இழப்பீடு கொடுக்கப்பட்டிருந்த போதும் புத்தாக்கங்களின் மூல அடிப்படையை கட்டியெழுப்பப்பட்டமை உறுதிப்படுத்தப்படாமை மற்றும் இந்த நடவடிக்கைகள் புத்தாக்குனர்களின் தைரியமிழ்ந்தமைக்கான காரணமாக இருந்தமை.

**பரிந்துரை**

இவ்வாறான கண்காட்சி ஒழுங்கமைக்கும் போது புத்தாக்கங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்தல்.

### 3.4 இலங்கையின் இளைர்களுக்கிடையே ஆக்கத்திறன்களை அபிவிருத்தி செய்தல்

1979 இன் 53 ஆம் இலங்கை புத்தாக்குனர்களை ஊக்குவிக்கும் அதிகாரச்சட்டத்தின் 11(1)(ஒ) உப பிரிவின் பிரகாரம் இலங்கையின் இளைர்களுக்கிடையே ஆக்கத் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கு தைரியம் வழங்குவதற்காக பாடசாலைகளில், பல்கலைக்கழகங்களில் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் ஆக்கத் திறன் சங்கங்களை ஒழுங்கமைத்தல் என்பன ஆணைக்குழுவின் நோக்கமாகும். ஆணைக்குழுவின் ஆணையாளரின் விஷேட கடிதம் மூலமும் பாடசாலைகளில் புத்தாக்கம் மற்றும் ஆக்கத் திறன்களை அபிவிருத்தி செய்தல் முக்கியமானதாக கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பாடசாலை பிள்ளைகளின் புத்தாக்கங்களை உருவாக்குவதற்கு தயார் செய்வதற்காக பாடசாலைகளில் இளம் புத்தாக்க சமூகமொன்றை உருவாக்குதல், தெளிவுபடுத்தும் மாநாடுகளை நடாத்துதல், வலய மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் புத்தாக்க கண்காட்சிகள் மற்றும் போட்டிகளை நடாத்துதல் மற்றும் புத்தாக்கங்களுக்காக தொலைக்காட்சி நிகழ்சித்திட்டங்களை நடாத்துதல் என்பன ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்படுகின்றது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### 3.4.1 பாடசாலைகளில் இளம் புத்தாக்க சமூகமொன்றை உருவாக்குதல்

2006 யூன் 06 ஆந் திகதிய 2006/23 ஆம் இலக்க கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் நாட்டிலுள்ள சகல 1AB, 1C, 2 வகையான பாடசாலைகளில் இளம் புத்தாக்க சமூகமொன்றை உருவாக்குதல், அதன் மூலம் தற்போதைய உலகில் நவீன தேவைகளுக்கு ஒத்துச் செல்வதற்கும், பாடசாலை மாணவர்களை புத்தாக்கத்திறன் தொடர்பில் ஈடுபடுத்தி, அதன் மூலம் உருவாக்கப்படுகின்ற புத்தாக்கங்களை தேசிய மட்டத்திலும் சர்வதேச ரீதியிலும் கண்காட்சிகளுக்கு சமர்ப்பிப்பதற்கும், புத்தாக்கங்களுக்காக பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்குவதன் மூலம் வணிகமயப்படுத்துவதற்கும் ஆணைக்குழுவின் ஒத்துழைப்புடன் கல்வி அமைச்சினால் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாடு முழுவதும் 1AB, 1C, 2 வகையான 6,669 பாடசாலைகள் காணப்பட்ட போதிலும், 2013 - 2015 தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் 2014 ஆம் ஆண்டின் போது இலக்கிடப்பட்ட 1550 பாடசாலை புத்தாக்க சமூகங்களின் எண்ணிக்கையில் உள்ளபடியான எண்ணிக்கை 116 ஆக இருந்தது.

(ஆ) மேற்கூறப்பட்ட வகைப்படுத்தலின் கீழ் பாடசாலைகளில் இருந்து 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது போட்டிக்காக முன்வந்து வெற்றிபெற்ற சதவீதம் முறையே 08 சதவீதம், 04 சதவீதம் மற்றும் 01 சதவீதமான ஆகக் குறைந்த

மட்டத்தில் காணப்பட்டமையினால் தேசிய முக்கியத்துவமுடைய புத்தாக்கங்கள் உருவாக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 ஆம் ஆண்டு முதல் பாரம்பரியமாக நடாத்திச் செல்லப்பட்ட பாடசாலைகளின் புத்தாக்கங்களை ஆணைக்குழுவின் இணையதளத்தில் பதிவு செய்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. இணைய தளத்தில் "Young Inventors Club" என்ற பிரிவில் காணப்படுகின்ற பாடசாலைகளில் புத்தாக்க சமூகத்திற்காக தனியாக ஏற்படுத்தப்பட்ட பிரிவுகளில் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லும் போது அந்த சமூக அங்கத்தவர்களின் தகவல்களைக் காண்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.2 புத்தாக்குனர்களுக்கான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்கள்


பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை விருத்தி செய்தல் மற்றும் பாடசாலை புத்தாக்கங்களை பிரபல்யப்படுத்தும் நோக்கில் 2013 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட புத்தாக்கங்கள் தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சித்திட்டங்களின் 32 ஒளிப்பரப்புப் பகுதிகள் சுயாதீன தொலைக்காட்சி வலைப்பின்னலின் ஊடாக ஒளிப்பரப்பப்பட்டிருந்தன. அதற்காக 54 பாடசாலை புத்தாக்கங்கள் பங்குபற்றச் செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக 2012, 2013 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 4,063,021 மற்றும் ரூபா 443,774 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக வடமத்திய மற்றும் வட மாகாணங்களின் பாடசாலை புத்தாக்குனர்களை பிரதிநிதித்துவப்படுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.4.3 பாடசாலை மட்டத்தில் உரிவாகின்ற புத்தாக்கங்கள்

பாடசாலை மட்டத்தில் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட புத்தாக்குனர்களில் ஆறுபேர்களின் வினாக்கொத்துக்களின் மூலம் பெறப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்யும் போது அவர்களின் புத்தாக்கங்களுக்காக தேவையான அபிவிருத்திகள் மற்றும் வணிக மயப்படுத்தல் என்பன மேற்கொள்ளப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டது. அதற்காக தாக்கமளித்த காரணங்களுக்கிடையே அந்த ஆக்கங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகள் கிடைக்கப்பெறாமை, நிதிவளம் காணப்படாமை மற்றும் புத்தாக்குனர் கல்வி நடவடிக்கைகளில் முழு நேரமாக ஈடுபடுத்துதல் என்பன இந்த ஆக்கங்களில் தூரமாக இருப்பதற்கான விடயங்களின் அடிப்படையாகும். மேலும் இது தொடர்பாக முன்னிற்பதற்கு முடியுமாகவுள்ள அரசாங்க நிறுவனங்களால் இதற்காக காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு போதியளவில் இல்லாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.



புல் வெட்டும் இயந்திரம்



புல் வெட்டும் இயந்திரத்தின் ஆரம்பப் பகுதி

**மதிப்பீடு**

i. பாடசாலை புத்தாக்குனர்களின் பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஊக்குவிக்கப்படாமையினால் அந்த புத்தாக்குனர்களிடமிருந்து பயன்கள் கிடைக்காமை.

ii. பாடசாலை புத்தாக்குனர்கள் போதியளவான பிரகாரம் செயற்பாடாமையினாலும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் மற்றும் பாடசாலை ஆசிரியர்களும் இது தொடர்பாக அக்கதை குறைவடைந்தமையாலும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல் குறைவடைந்தமை.

iii. பாடசாலை மட்டத்தில் புத்தாக்குனர்களை ஊக்குவித்தல் குறைவடைந்தமையினால் எதிர்காலத்தில் நாட்டிற்கு பயனுள்ள புத்தாக்கங்களை உருவாக்குதல் குறைவடையக்கூடியதாக இருந்தமை.

**பரிந்துரை**

i. பாடசாலை மட்டத்தில் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்குத் தேவையான வளங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்துதல்.

ii. பணம் மற்றும் பரிசு கையளிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களுக்கு வரையறுக்காமல் புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய நிறுவனங்களுக்கு புத்தாக்குனர்களை தொடர்புபடுத்துவதற்கு முன்னின்று செயற்படல்.

## 3.5 புத்தாக்கங்களை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சந்தைப்படுத்துதல்

புத்தாக்கங்களை உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ சந்தைப்படுத்துவதற்காக புத்தாக்குனர்களுக்கு உதவியளித்தல் தேசிய பொருளாதாரத்திற்கு புத்தாக்குனர்களின் உயர் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வவது முக்கியமானதாகும். புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களை வணியமயப்படுத்துவதற்குத் தேவையான மூலதனம், சந்தை வசதி மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் வேண்டும். இது தொடர்பான அவதானிப்புக்கள் பின்வருமாறு இருந்தது.

### 3.5.1 விளம்பர தேவை

புத்தாக்கங்களைப் போல எந்தவொரு பொருளையும் சந்தைக்கு அறிமுகப்படுத்தும் போதும் அதனை சந்தையில் பேணிச் செல்லும் போதும் தற்போதைய சந்தையில் விளம்பர தேவையொன்றினால் பிரத்தியேகமாகத் தென்படுகின்றது. பொருளின் தரம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றைப் பேணிச் செல்வதற்கு மேலாக விளம்பர தேவையை நாடும் உற்பத்தியாளர்களுக்கு தற்போது முடியாதுள்ளது. இந்த புத்தாக்கங்கள் தொடர்பான விளம்பர பணிகளுக்காக முன்னின்று வழங்குதல் புத்தாக்குனர்களுக்காக மேற்கொள்ளகூடிய இன்னுமொரு உபகாரமாகும்.

### 3.5.2 இஸ்டாயோஜகய்ன்

புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களை வணிகமயப்படுத்தும் போது ஏற்படுகின்ற அதிக ஆபத்தினால் அதற்காக உதவி வழங்குவதற்கு உலகத்தில் பயன்படுத்தப்படுகின்ற மிகவும் வினைத்திறனான முறைமை புத்தாக்குனர்களினால் ஏற்றுக்கொள்கின்ற முதலீட்டாளர்களைத் தொடர்படுத்துவதாகும்.

ஆணைக்குழுவினால் நிறைவேற்றுனர்களாக இந்த நிகழ்ச்சித்திட்டம் நடாத்திச் செல்லப்படுகின்றது. 2013 - 2015 தந்திரோபாயத் திட்டத்தின் பிரகாரம் இலக்கிடப்பட்ட வெற்றிகரமான புத்தாக்குனர்களின் எண்ணிக்கை 5 ஆக இருந்த போதிலும், 80 விண்ணப்பதாரர்கள் பங்குபற்றி ஒரு புத்தாக்குனர் மாத்திரம் தெரிவு செய்யப்பட்டிருந்தார். இந்த நிலைமைக்கு மொழி பிரச்சினையாக இருந்ததுடன் அதற்குத் தேவையான ஆவணங்களை தயாரிப்பதற்கு முடியாதுள்ள புத்தாக்குனர்களுக்கு உதவியொன்றை வழங்குவதற்கு ஆணைக்குழுவிற்கு முடியாதிருந்தது.

**மதிப்பீடு**

ஆவணங்களைத் தயாரிக்கும் போது விஷேட உதவியொன்று புத்தாக்குனர்களுக்குக் கிடைக்காமை மற்றும் அவர்கள் போதியளவாக அறிவிக்கப்படாமையினால் ‘‘இஸ்டா யோஜகய்ன்’’ என்ற நிகழ்ச்சித்திட்டம் மூலம் பயன்பாட்டைப் பெறும் புத்தாக்குனர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை.

**பரிந்துரை**

i. புத்தாக்கங்களைப் பயன்படுத்துவோருக்கிடையே விளம்பரப்படுத்துவதற்காக வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

ii. இஸ்டாயோஜகய்ன் போன்ற நிகழ்ச்சித் திட்டத்தை முறையாக அமுல்படுத்துவதால் புத்தாக்குனர்கள் அதிகரித்த எண்ணிக்கையில் புத்தாக்கங்களை வணிகமயப்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களை அதிகரித்தல்.

iii. தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமான புத்தாக்குனர்களை இனங்கண்டு அவர்களுக்கு தொடர்ச்சியாக ஊக்குவித்தல் வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

## 4. முடிவுகள்

i. புத்தாக்குனர்களுக்கு தமது புத்தாக்கங்களை அபிவிருத்தி செய்வதற்கும் அவற்றை வணிகமயப்படுத்துவதற்கும் தேவையான நிதிரீதியான, தொழில்நுட்ப மற்றும் சட்டரீதியான உதவிகள் போதியளவான மட்டத்தில் ஆணைக்குழுவால் வழங்கப்படாமையின் காரணமாக புத்தாக்கங்கள் தேசிய பொருளாதாரத்திற்கு ஆக்கபூர்வமானதாக பங்களிப்புச் செய்வதற்கு முடியாதிருந்தமை முடியாதுள்ளது.

ii. பாடசாலை புத்தாக்கங்களை அமுல்படுத்துதல் போதியளவான மட்டத்தில் காணப்படாமை, விரிவுரையாளர்கள் இது தொடர்பான ஆர்வம் குறைவடைந்தமை மற்றும் புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக ஊக்குவிக்காமை போன்றவற்றின் காரணமாக எதிர்காலத்தில் நாட்டிற்கு பயனுள்ள புத்தாக்கங்களை உருவாக்குதல் குறைவடைந்தமை தெரிவாகின்றது.

iii. பேடன்ட் அனுமதிப்பத்திரத்தைப் பதிவுசெய்வதற்காக அதிகளவான காலம் எடுத்தமையினால் புத்தாக்குனர்களுக்கு பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பான நம்பிக்கை மற்றும் புத்தாக்கங்களின் போது பேடன்ட் அனுமதிப்பத்திரம் தொடர்பான நம்பிக்கை மற்றும் புத்தாக்கங்களின் போது பேடன்ட் அனுமதிப்பத்தில் உள்ள முக்கியத்துவம் குறைவடைந்தமை தெளிவாகின்றது.

iv. பேடன்ட் அனுமதிப் பத்திரத்தைப் பதிவு செய்தல், தரவுகளை கணனிமயப்படுத்துதல், தொழில்நுட்ப மற்றும் புத்துாக்க ஒத்துழைப்பு நிலையத்தைத் தாபித்தல் மற்றும் பேடன்ட் விண்ணப்பதாரர்களுக்கு தெளிவுபடுத்துதல் போன்ற பணிகள் போதியளவான மட்டத்தில் காணப்படாமையினால் புத்தாக்குனர்களுக்கு செயற்திறனான சேவையொன்று கிடைக்காதிருந்தமை தெளிவாகின்றது.